நின்றிருந்த கட்சியினர், பொதுமக்களை பார்த்து கை அசைத்தபடி பிரதமர் மோடி சென்றார். அவர் நேரு உள் விளையாட்டு அரங்கத்திற்கு 11.30 மணிக்கு வந்தார்.

தொடர்ந்து பிரதமர் மோடி விழா நடைபெறும் மேடையில் வைக்கப்பட்டிருந்த எம்ஜிஆர், ஜெயலலிதாவின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து அவருக்கு முதல்வர் எடப்பாடி பொன்னாடை போர்த்தி, கிருஷ்ணர் சிலையை நினைவு பரிசாக அளித்தார்.

முன்னதாக உள்விளையாட்டரங்கில் ஆவடி பீரங்கி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட அர்ஜுன் எம்பிடி எம்கே 1ஏ ரக ராணுவ கவச வாகன அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அர்ஜுன் டாங்கை நாட்டுக்கு அர்ப்பணித்த பிரதமர், ராணுவ வீரர்களிடம் உரையாடியதோடு கவச வாகனம் முன்பு வீரர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

பின்னர் விழா மேடையில் இருந்தபடி ரூ.370 கோடியில் சென்னை, வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையே மெட்ரோ ரயில் சேவை திட்டத்தை பொது மக்கள் பயன்பாட்டிற்காக மோடி கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும், ரூ.293.4 கோடியில் சென்னை கடற்கரை அத்திப்பட்டு 4 வது வழித்தடம் மற்றும் விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர் ஒரு வழிப்பாதை மின்மயமாக்கு தல் திட்டத்தையும் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். ஆவடி பீரங்கி தொழிற் சாலையில் தயாரிக்கப்பட்ட எம்.பி.டி. அர்ஜுன் எம். கே.1ஏ, பீரங்கி கவச வாகனத்தை ராணுவத்திடம் பிரதமர் மோடி ஒப்படைத்தார்.

மேலும், ரூ.2,640 கோடியில் கல்லணை கால்வாய் புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்தும் திட்டம், ரூ.1000 கோடியில் சென்னை இந்திய தொழில்நுட்ப கழக டிஸ்கவரி வளாகம் ஆகிய வற்றிற்கும் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து பிரதமர் மோடி சிறப்புரையாற்றினார். முன்னதாக விழாவில் துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் வரவேற்புரை வழங்கினார். முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமை யேற்று உரையாற்றினார்.

விழா பிற்பகலில் முடிந்தது. முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் ஆகியோர் பிரதமர் மோடியை நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் உள்ள ஓய்வு அறையில் சந்தித்து பேசினர். இந்த சந்திப்பு சுமார் 30 நிமிடம் நடைபெற்றது. அப்போது, தமிழக சட்டமன்ற தேர்தலில் பாஜவுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகள், சசிகலா விவகாரம் குறித்து இருவரும் மோடியிடம் பேசினர். தொடர்ந்து கூட்டணி கட்சி தலைவர்கள் தொகுதி பங்கீடு குறித்து ஆலோசனை நடத்தினார்கள். இதையடுத்து, மதியம் 1.45 மணிக்கு அடையாறு ஹெலிபேடுக்கு சென்றதும், மணிக்கு தனி ஹெலிகாப்டரில் சென்னை விமான நிலையம் சென்றார். 2 மணிக்கு இந்திய விமான படை தனி விமானத்தில் கேரளா மாநிலம் கொச்சி புறப்பட்டு சென்றார்.

4 அடுக்கு பாதுகாப்பு

பிரதமர் மோடி வருகையையொட்டி சென்னை பழைய விமான நிலையத்தில் இருந்து நேரு விளையாட்டு அரங்கம் முதல் 4 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக சுமார் 10 ஆயிரம் போலீசார் நேற்று இரவு முதலே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அதே போன்று கோயம்பேடு - சென்ட்ரல், ராயபுரம் - பாரிமுனை, அண்ணா சாலை - ராயபுரம் செல்லும் வாகனங்கள் இன்று காலை 8 மணியில் இருந்து மதியம் 1 மணி வரை மாற்று பாதையில் திருப்பி விடப்பட்டன.

கருப்பு மாஸ்க் அணிய தடை

பிரதமர் மோடி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நேரு உள்விளையாட்டிற்கு வந்த பொதுமக்கள் கடும் சோதனைக்கு பிறகே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் கருப்பு கலர் மாஸ்க் அணிந்து இருந்தால் போலீசார் அகற்ற அறிவுறுத்தினார்கள். இதை தொடர்ந்து போலீசார் சார்பில் மாஸ்க் தரப்பட்டன. அதன்பிறகு அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் கொரோனா பரிசோதனை

பிரதமர் மோடி நிகழ்ச்சியில் அதிமுக, பாஜ தொண்டர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். முன்னதாக கடந்த 2 நாட்களுக்கு முன்பு அவர்கள் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை எடுக்கப்பட்டன. இந்த பரிசோதனை முடிவில் நெகட்டிவ் வந்தவர்கள் மட்டுமே விழா நடைபெற்ற அரங்கில் அனுமதிக்கப்பட்டனர்.

முதல் வரிசையில் கூட்டணி கட்சிகளுக்கு இடம்

மெட்ரோ சேவை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த விழாவில் கூட்டணி கட்சிகளான பாமக, தமாகா, தேமுதிக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். இவர்களுக்கு முதல் வரிசையில் இருக்கைகள் போடப்பட்டிருந்தது.

தமிழில் உரையை தொடங்கிய மோடி

பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து பிரதமர் மோடி வணக்கம் தமிழ்நாடு, வணக்கம் சென்னை என்று தமிழில் உரையை தொடங்கினார். அப்போது, அப்போது, விளையாட்டரங்கில் திரண்டிருந்தவர்கள் உற்சாகமாக முழக்கம் எழுப்பினர்.

கல்லணை சிறப்புகளை சுட்டி காட்ட ஔவையார் பாடலை பாடிய மோடி

வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும். நெல் உயர குடி உயரும், குடி உயர கோல் உயரும் என்று கல்லணை சிறப்புகளை சுட்டி காட்டி ஔவையாளர் பாடிய பாடலை பிரதமர் மோடி பாடினார். இது, கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

பிரதமர் மோடி தொடங்கி வைத்த மெட்ரோ ரயில் சென்னை வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் நோக்கி சென்றது.

மெட்ரோ ரயில் நீட்டிப்பு திட்ட சிறப்பம்சங்கள்

வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரை புதிதாக துவக்கி வைக்கப்பட்ட 9.051 கி.மீ தூரத்திலான சென்னை மெட்ரோ ரயில் கட்டம்-1, நீட்டிப்புத் திட்டம், 2 சுரங்கப்பாதை மற்றும் 5 மெட்ரோ ரயில் நிலையங்களுடன் வடசென்னையின் மத்தியில் அமைந்துள்ளது. ரூ.3,770 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்திற்கு மத்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ஆகியவை நிதியுதவி அளிக்கின்றன.

தற்போது, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் முதல் கட்ட திட்டம் 54 கி.மீ நீளத்திலும், 21 சுரங்கப்பாதை மற்றும் 18 உயர்த்தப்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்களைக் கொண்டுள்ளது. வடசென்னை பயணிகள் சென்னை விமான நிலையத்தை 60 நிமிடங்களில் வந்தடைய முடியும். இதன்மூலம், கரியமில வாயுவின் அளவு 30198 டன் குறையும். சென்னை மெட்ரோ ரயிலின் இந்த வழித்தடத்தில் ஒவ்வொரு நாளும் சுமார் 2 லட்சம் மக்கள் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமருடன் எடப்பாடி 15 நிமிடம் தனியே சந்திப்பு

பிற்பகலில் விழா முடிந்ததும் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் ஆகியோர் பிரதமர் மோடியை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் உள்ள ஓய்வு அறையில் சந்தித்து பேசினர். இந்த சந்திப்பு சுமார் 30 நிமிடம் நடைபெற்றது. அப்போது, தமிழக சட்டமன்ற தேர்தலில் பாஜவுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகள், சசிகலா விவகாரம் குறித்தும் பேசினர். பின்னர், முதல்வர் எடப்பாடி பழனிசாமி தனியாக 15 நிமிடம் பிரதமரை சந்தித்து பேசி உள்ளார். இது, அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.